ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1765/13 - 2012 ජූලි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.07.05

*1765/13 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

சுங்கக் கட்டளைச் சட்டம்

**6அ ஆம் பிரிவு**

**விமான நிலையத்தில் இரத்தினக் கற்கள் பொதிகளை விடுவிப்பதற்கான விசேட சேவைக் கொடுப்பனவுக் கட்டணம்**

பிரயாணி ஒருவரினால் கொண்டுவரப்பட்ட இரத்தினக்கற்கள் பொதிகளை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு சுங்க நடைமுறையின் கீழ் விடுவிக்கும் வகையில் உள்வரும் பிரயாணிக்கு வழங்கப்படும் சேவையானது, 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்கச் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 6அ (அ) ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறான அர்த்தத்தின் கீழ் அளிக்கப்படும் விசேட சேவையெனப் பிரகடனப்படுத்தப்படும் உத்தரவொன்றை கௌரவ நிதி அமைச்சர் பிறப்பித்திருப்பதனால் ;

ஆகவே, இப்பொழுது, சுங்கப் பணிப்பாளர் நாயகம் நெவில் குணவர்தன ஆகிய நான், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 6அ ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் பண்பால், இந்த அறிவித்தல் மூலம் 05.07.2012 ஆந் திகதியிலிருந்து மேற்கண்ட விசேட சேவை வழங்கலுக்கு பிரயாணி சமர்ப்பிக்கும் ஒவ்வொரு சுங்கப் பொருட் பிரகடனப் பத்திரத்திற்கும் (கஸ்டெக்) அமெரிக்க டொலர்கள் இருநூறு (US$ 200) அல்லது அதற்கு சமமான செலுத்தப்படும் திகதிக்கு உரித்தான நாணய மாற்று விகிதத்திற்கேற்ப வேறு ஏதேனும் மாற்றப்படக்கூடிய நாணயத்தொகை செலுத்தப்பட வேண்டுமென இத்தால் குறித்துரைக்கிறேன்.

2012 யூன் 15 ஆந் திகதிய 1762/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

கலாநிதி நெவில் குணவர்தன,
சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைச் சுங்கம்,
கொழும்பு 11,
2012,யூலை 04.

07-554